# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2314/40 - 2023 ජනවාරි මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.01.12

*2314/40 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர், இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் கந்தபுரம் 11 ஆம் வட்டாரத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் துரைச்சாமி நடராஜசிங்கம் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30 ) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் கந்தபுரம் 11 ஆம் வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக புண்ணியமூர்த்தி விஜயகுமாரன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளராதலாலும்;

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான ஜேசுதாசன் ஜெனிற்றன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு புண்ணியமூர்த்தி விஜயகுமாரன் என்பவர் வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் கந்தபுரம் 11 ஆம் வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ஜே. ஜெனிற்றன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
வவுனியா,
*2023, சனவரி 12.*

EOG *01 - 0114*


1A - G 38561 — 16 (2023/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*